கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக சீமான் மீது வழக்குப் பதிவு

ஈரோடு, ஜன. 31: கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக சீமான் மீது மூன்று பிரிவுகளின்கீழ் கருங்கல்பாளையம்போலீஸார் வெள்ளிக்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமியை ஆதரித்து ஈரோடு அருகே நெரிக்கல் மேட்டில் கடந்த 28- ஆம் தேதி இரவு பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பேசிய நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பெரியார் ஈவெரா குறித்து விமர்சித்தபோது, தான் வெடிகுண்டு வீசுவேன் என பேசியிருந்தார். இதற்கு பெரியார் அம்பேத்கர் கூட்டமைப்பினர், தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் கண்டனம் தெரிவித்து ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் புகார் மனு அளித்தனர்.

இந்நிலையில், சீமான் மீது கலவரத்தை தூண்டும் வகையில் பேசியது, பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பேசியது உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கருங்கல்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சீமான் ஈரோடு கிழக்கு தொகுதியில் கடந்த 24- ஆம் தேதி முதல் பிரசாரம் செய்து வருகிறார். இதில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட அதிகநேரம் பிரசாரம் மேற்கொண்டது, அனுமதிக்கப்பட்ட இடத்தில் பிரசாரம் செய்யாமல் வேறு இடத்தில் பிரசாரம் செய்தது என தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக 30- ஆம் தேதி வரை 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர நெரிக்கல் மேடு பகுதியில் கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக ஒரு வழக்கு என மொத்தம் இது வரை அவர் மீது 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவித்தனர்.

கடந்த 2023- ஆம் ஆண்டு இடைத்தேர்தலின் போதும் சீமான் அருந்ததியர் சமூக மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் எஸ்சி, எஸ்டி பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற உத்தரவின்படி ஜகபர் அலி உடலை தோண்டியெடுத்து 'எக்ஸ்ரே' எடுப்பு

புதுக்கோட்டை, ஜன. 31: புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அருகே லாரி ஏற்றிக் கொல்லப்பட்ட சமூக செயற்பாட்டாளர் ஜகபர் அலியின் உடல், நீதிமன்ற உத்தரவின்படி வெள்ளிக்கிழமை தோண்டி எடுக்கப்பட்டு மருத்துவக் குழுவினரால் முழுமையாக 'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டது.

திருமயம் அருகேயுள்ள வெங்களூரைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஜகபர்அலி, கனிம வளக் கொள்ளைக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்ததால், கடந்த 17-ஆம் தேதி லாரி ஏற்றிக் கொல்லப்பட்டார். இந்த வழக்கில், குவாரி உரிமையாளர்கள் உள்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவரது உடற்கூறாய்வு முறையாக நடைபெற்றதா என சந்தேகம் இருப்பதாக அவரது மனைவியும் புகார்தாரருமான மரியம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் மீதான விசாரணையின் முடிவில், அடக்கம் செய்யப்பட்ட ஜகபர்அலியின் உடலைத் தோண்டி எடுத்து, அரசு மருத்துவக் குழுவினரைக் கொண்டு எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

இதன்படி, வெங்களூர் கோணாப்பட்டு சாலையிலுள்ள இஸ்லாமியர்கள் கபர்ஸ்தானில் அடக்கம் செய்யப்பட்ட ஜகபர் அலியின் உடலைத் தோண்டி எடுப்பதற்கான பணிகள் வெள்ளிக்கிழமை பகலில் மேற்கொள்ளப்பட்டன.

வெங்களூர் கபர்ஸ்தானுக்குள் வெள்ளிக்கிழமை கவச உடை அணிந்து செல்லும் மருத்துவக் குழுவினர்.

நீதிமன்ற உத்தரவின்படி, வட்டாட்சியர் ராமசாமி, சிபிசிஐடி துணைக் காவல் கண்காணிப்பாளர் இளங்கோவன் ஜென்னிங்ஸ், ஆய்வாளர் புவனேஸ்வரி ஆகியோர் முன்னிலையில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவக் குழுவினர் பிற்பகலில் உடலைத் தோண்டி எடுத்து எக்ஸ்ரே எடுத்தனர்.

சுமார் இரண்டரை மணி நேரம் இந்தப் பணிகள் நடைபெற்றன. மருத்துவக் குழுவின் மருத்துவர்கள் மதன்ராஜ், நெடுங்கிள்ளி, எக்ஸ்ரே தொழில்நுட்பப் பணியாளர் சுரேஷ் ஆகியோர், முழு கவச உடை அணிந்து இப் பணியை மேற்கொண்டனர். ஜகபர்அலியின் உடல் எக்ஸ்ரே படங்கள் விசாரணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிகிறது.

நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த ஆய்வை படம், விடியோ எடுக்க முடியாதபடி, கபர்ஸ்தான் உள்ள இடத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவுக்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை.

காவல்துறையினரின் புகைப்படக்காரர், ஒளிப்பதிவாளர் மட்டும் அனுமதிக்கப்பட்டு நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டன.

வெளிநாட்டு வேலை மோசடி: விழிப்புணர்வு ஏற்படுத்த கோரிக்கை

சென்னை, ஜன. 31: வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி தமிழர்களை ஏமாற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று சண்டீகர் தமிழ் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கத்தின் பொதுச் செயலர் சுப.இராஜசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் தமிழர்களை ஏமாற்ற தொடர்ந்து ஊடகங்களில் போலி விளம்பரங்கள் வெளியிட்டு பணமோசடி செய்யும் போலி முகவர்கள் பஞ்சாப், மொஹாலி, சண்டீகர் ஆகிய பகுதிகளில் பெருகியுள்ளனர்.

தமிழர்களை ஈர்த்து கனடா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பு எனப் பொய்யான உத்தரவாதம் அளித்து பெருந்தொகையை பெற்றுக் கொண்டு ஏமாற்றுவதும், கேள்வி கேட்போரை மிரட்டுவதும் தொடர் நிகழ்வுகளாகி அச்சுறுத்துகின்றன. இவர்களிடம் பெருந்தொகையைக் கொடுத்து ஏமாந்து தவிக்கும் தமிழர்கள் மதுரை மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். விமானப் பயணச்சீட்டுகளை குறைந்த கட்டணத்தில் வழங்குவதாகப் பொய்யாக அறிவித்து, ஏமாறும் தமிழர்களிடம் தொடர் வசூலில் ஈடுபடும் அவலமும் நடக்கிறது.

இவ்வகை மோசடிகள் தொடராதபடி, மதுரை உள்ளிட்ட தமிழக மாவட்டங்களில் இனிமேலும் யாரும் ஏமாறாமல் காக்கும் வகையில் ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறை சுதந்திரமாக செயல்படவில்லை

சென்னை, ஜன.31: தமிழகத்தில் காவல் துறை சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலை உள்ளது என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் சென்னை உயர்நீதிமன்றம், 3 காவல் துறை உயர் அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து வழக்கை விசாரிக்க உத்தரவிட்டது. இந்தக் குழுவுக்கு உதவியாக சைபர் குற்றப்பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ராகவேந்திரா கே. ரவி செயல்பட்டு வந்தார். இந்த நிலையில், சிறப்பு புலனாய்வுக் குழுவில் உள்ள உயர் அதிகாரிகள் தன்னை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கவில்லை என சிறப்பு புலனாய்வுக் குழுவின் விசாரணையிலிருந்து விலகியதுடன், தனிப்பட்ட காரணங்களுக்காக தன்னுடைய காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவியை ராஜிநாமா செய்வதாகவும் டிஜிபிக்கு கடிதம் எழுதியுள்ளார். இதன்மூலம் தமிழகத்தின் சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

அண்ணா பல்கலை. மாணவி விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனைப் பெற்றுத் தரும் வகையில், சிறப்பு புலனாய்வுக் குழுவின் விசாரணையை சென்னை உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்று ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

பேருந்துக்காக காத்திருந்தவர்கள் மீது கார் மோதல்: 2 பேர் உயிரிழப்பு

சிதம்பரம், ஜன.31: கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அருகே கம்மாபுரம் பேருந்து நிறுத்தத்தில் வெள்ளிக்கிழமை மாலை பேருந்துக்காக காத்திருந்தவர்கள் மீது அதிவேகத்தில் வந்த கார் மோதியதில் பெண் உள்பட 2 பேர் உயிரிழந்தனர்.

கம்மாபுரம் பேருந்து நிறுத்தத்தில் சு.கீனனூர் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் (40), வளையமாதேவி கிராமத்தைச் சேர்ந்த செல்வி (43), சிலம்பரசி (28) ஆகியோர் பேருந்துக்காக காத்திருந்தனர். அப்போது, விருத்தாசலத்தில் இருந்து சிதம்பரம் நோக்கி அதிவேகமாக வந்த ஆந்திர மாநில பதிவெண் கொண்ட கார் திடீரெனகட்டுப்பாட்டைஇழந்து சாலையோரம் நின்றிருந்த 3 பேர் மீதும் மோதிவிட்டு, அருகில் இருந்த கழிவுநீர் கால்வாய்க்குள் புகுந்தது.

இந்த விபத்தில் செல்வி, செந்தில்குமார் ஆகியோர் உயிரிழந்தனர். சிலம்பரசி பலத்த காயமடைந்தார். தகவல் நிந்து வந்த கம்மாபுரம் போலீஸார் சிலம்பரசியை மீட்டு, விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டு, அவசர ஊர்தி மூலம் அதே மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க முயன்றனர்.

சாலை மறியல்: விபத்தை ஏற்படுத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி, பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீஸார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியும் சமாதானமாகவில்லை.

இதையடுத்து அங்கு வந்த விருத்தாசலம் வட்டாட்சியர் உதயகுமார் தலைமையிலான வருவாய்த் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை சமாதானப்படுத்தி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர். இந்த விபத்து தொடர்பாக கம்மாபுரம் போலீஸார் வழக்கு பதிந்து, காரில் வந்த ஹைதராபாதைச் சேர்ந்த 6 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

DBS வங்கி இந்தியா லிமிடெட்,
பிராந்திய அலுவலகம், பினாட்டினம் ஜுபிலி பில்டிங், எண்.68, ஒப்பணக்கார வீதி, முதல் தளம், கோயமுத்தூர் – 641 001.

DBS

அசையாச் சொத்தின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-A (கான்க நிபந்தனையின் விதி 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையறுதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

DBS வங்கி இந்தியா லிமிடெட், நாமக்கல் கிளை (27.11.2020 தேதியிலிருந்து லட்சுமி விலாஸ் வங்கி லிமிடெடின் அனைத்து செயல்பாடுகளும் DBS வங்கி இந்தியா லிமிடெட்–க்கு மாற்றப்பட்டுள்ளது) திட்டம், 2020 நாள் 25.11.2020க்கு இணங்க, லட்சுமி விலாஸ் வங்கி, (DBS வங்கி இந்தியா லிமிடெட் உடன் இணைக்கப்பட்டது) அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்), வங்கிக்கு வரவேண்டிய தொகை **ரூ.1,09,64,239.96 (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து அறுபத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்து ஒன்பது மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு மட்டும்) 31.12.2024** தேதி வரை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளுடன், கடன்தாரர் : **M/s.சத்யம் ஏஜென்சீஸ், உரிமையாளர் : திரு.G.பாஸ்கரன்,** எண்.153 C–9, R.கோபால் காம்ப்ளக்ஸ், சேலம் ரோடு, நாமக்கல் – 637 001, வசிப்பிட முகவரி : **திரு.G.பாஸ்கரன்,** த/பெ.திரு.கோவிந்தசாமி, கதவு எண்.80-E4, பொன் கைலாஷ் கார்டன்ஸ், சாவடி வீதி, R.P.புதூர், நாமக்கல் – 637 001 மற்றும் **திருமதி.B.நிர்மலா,** க/பெ.திரு.G.பாஸ்கரன், எண்.80-E4, பொன் கைலாஷ் கார்டன்ஸ், சாவடி வீதி, R.P.புதூர், நாமக்கல் – 637 001 என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்கு அடமானப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, ஆக்கபூர்வ கவாதீனம் (constructive Possession) செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர் (கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் "எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்" விற்கப்படும்.

மின் ஏலத்தின் தேதி மற்றும் நேரம், நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன்வைப்புத் தொகை விபரம் :

மின் ஏலத் தேதி	**13.03.2025; காலை 11.30 மணியிலிருந்து மதியம் 1.30 மணி வரை, விற்பனை நிறைவு பெறும் வரை 5 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்.**
நிர்ணயிக்கப்பட்ட விலை	**ரூ.1,05,00,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐந்து லட்சம் மட்டும்)**
முன்வைப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை செலுத்தும் விபரம்	**ரூ.10,50,000/– (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** முன்வைப்புத் தொகையை NEFT/RTGS மூலமாக கீழ்குறிப்பிட்ட கணக்கிற்குச் செலுத்த வேண்டும். வங்கி மற்றும் வங்கி கிளை : DBS வங்கி இந்தியா லிமிடெட், மும்பை. கணக்கு எண்.811ASSETCCLVBINR IFSC: DBSS0IN0811 (5வது மற்றும் 8வது எழுத்துக்கள் எண்ணில் 'சைபரா'க் குறிக்கும்.
முன்வைப்புத் தொகை செலுத்த மற்றும் டெண்டர் படிவம் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்	**12.03.2025; மாலை 4.00 மணிக்கு முன்னதாக.**
டெண்டர் படிவம் சமர்ப்பிக்கும் மற்றும் தொடர்புக்கான முகவரி	DBS வங்கி இந்தியா லிமிடெட், நாமக்கல் கிளை, பொன்னுசாமி காம்ப்ளக்ஸ், எண்.377/115-B1, தரைத் தளம், சேலம் ரோடு, நாமக்கல் – 637 001. மொபைல் : 96594 40064 / 78718 73834.
ஏல உயர்வுத் தொகை	ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)
சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	**04.03.2025** காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை.

அசையாச் சொத்து விபரம் :

திரு.G.பாஸ்கரனுக்குச் சொந்தமான சொத்து) : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் இணை 1 சார் பதிவு மாவட்டம், நாமக்கல் தாலூகா, நல்லிபாளையம் குரூப், முதலைப்பட்டி கிராமம், சர்வே எண் பழையது 295/3A1 மற்றும் 295/2B1, சர்வே எண் புதியது 295/2B1 யில் அடங்கிய V.I.P.நகர் மனை எண்கள் 52 மற்றும் 53ல் அடங்கிய மனை நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** 23 அடி அகல கிழமேல் தடத்துக்கு வடக்கு, மனை எண்.46 மற்றும் 47 க்குத் தெற்கு, 25 அடி அகல தென்வடல் தடத்துக்குக் கிழக்கு, மனை எண்.54க்கு மேற்கு. இதனுள் கிழமேல் இருபுறமும் 60 அடி, தென்வடல் இருபுறமும் 50 அடி ஆக மொத்தம் 3000 சதுர அடி விஸ்தீரண நிலமும், அதன் அனைத்து சுதந்திரத்துடன் கூடிய மாமூல் தடவழி உரிமைகள் மற்றும் பிற பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த சொத்து, மேற்படி சொத்து முதலைப்பட்டி ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு வங்கியின்/ பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்திலுள்ள (https://go.dbs.com/corpimportantannouncements) 'லிங்க்'கினைப் பரிசீலிக்கவும். மேலும் மின் ஏலத்தின் சேவையாளர் M/s.4 குளோசர் (bankauction.in) ன் இணையதள போர்டலையும் (https://bankauctions.in) அணுகலாம். மின் ஏலமானது. மின் ஏலத்தின் சேவையாளர் M/s.4 குளோசர் (bankauction.in) ன் இணையதளத்தில் நடைபெறும். இந்தப் பிரகரத்தை கடன்தாரர்/உத்தரவாதமளித்தவர்/ அடமானதாரர் ஆகியோருக்கு சர்பேசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் 30 நாள் சட்டபூர்வ அறிவிப்பாகவும் கொள்ளவும்.

தேதி : 31.01.2025
இடம் : நாமக்கல்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்.,

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

வட்ட சாஸ்த்ரா சென்டர், எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயமுத்தூர் - 641 018. போன் : 0422 2231314, 0422-2231345. இ-மெயில் : cs4371@pnb.co.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 26.02.2025 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை (EMD) மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 26.02.2025 தேதி அன்று பிற்பகல் 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையறுதலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள கவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும். பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான கவாதீனம் எடுத்த தேதி ஈ) கவாதீனத்தின் தன்மை கொள்நிலை/ ஆக்கபூர்வ கவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**கிளை : சேலம் மெயின் (041600)** **M/s. யாழ் இன்டஸ்ட்ரீஸ்** **கடன்தாரர் :** **M/s. யாழ் இன்டஸ்ட்ரீஸ்,** எண். 2/669F, சாமுண்டி நகர், ஊத்துமலை எதிரில், வண்ணான் காடு, எருமமாளையம், சேலம் – 636 015. **திரு.K.கண்ணன் (M/s. யாழ் இன்டஸ்ட்ரீஸ்–ன் பங்குதாரர்/ அடமானதாரர்),** எண்.93, ராஜ வீதி, மேட்டுப்பட்டி அஞ்சல், வாழப்பாடி, சேஷன்சாவடி, சேலம் – 636 111. **செல்வி.P.கிருத்திகா (பங்குதாரர்)** எண்.5/389A, மேட்டுப்பட்டி புதூர், மேட்டுப்பட்டி, சேலம் – 636 111.	**(அட்டவணைச் சொத்து) : திரு. K.கண்ணனின் பெயரிலான சொத்து (PAN FMRPK0126D)** **இனம்–1 :** சேலம் மாவட்டம், வாழப்பாடி தாலூகா, சேலம் (கிழக்கு) பதிவு மாவட்டம், அயோத்தியாபட்டினம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண்.4/1, அரசாங்க சர்வே/UDR நத்தம் சர்வேயின்படி, சர்வே எண்.272/23, இதிலுள்ளதும் அதன் பகுதியுமான ஒரு பகுதி நிலத்தின் **எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் :** கீழே குறிப்பிட்ட இனம் எண்.2 சொத்துக்குக் கிழக்கு, ராஜ வீதிக்கு மேற்கு, ராஜ வீதிக்கு வடக்கு, பாண்டியராஜனின் சொத்துக்குத் தெற்கு.இதன் மத்தியில், **அளவுகளாக,** கிழமேல் வடபுறம் – 24 அடி, கிழமேல் தென்புறம் – 24 அடி, தென்வடல் கிழபுறம் – 47 அடி, தென்வடல் மேற்புறம் – 47 அடி, ஆகச் சேர்ந்த மொத்தம் 1128 சதுரடி நிலம், அதனோடான கட்டிடம் (கதவு எண்.1/181 மற்றும் 182, சொத்து வரி விதிப்பு எண்கள் 201 மற்றும் 202, மின் நுகர்வு சர்வீஸ் S.C. எண்.04–436–002–626), அங்குள்ள ரோடுகளில் வழித்தட மற்றும் வண்டித் தட உரிமைகளுடன்மற்றும் அனைத்துப் பாத்தியதைகள், வசதிகளில் உரிமைகளுடன். தானத் தீர்வுப் பத்திர தேதி : 15.11.2019 (ஆவண எண்.3676/2019) ல் மற்றும் அதன் மூலப் பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளபடி. **இனம்–2 :** சேலம் மாவட்டம், வாழப்பாடி தாலூகா, சேலம் (கிழக்கு) பதிவு மாவட்டம், அயோத்தியாபட்டினம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பட்டி கிராமம், நத்தம் சர்வே எண்.4/1, அரசாங்க சர்வே/UDR நத்தம் சர்வேயின்படி, சர்வே எண்.272/23, இதிலுள்ளதும் அதன் பகுதியுமான ஒரு பகுதி நிலத்தின் **எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம் :** G.ரங்கநாதனின் வீட்டுக்குக் கிழக்கு, மேலே குறிப்பிட்ட இனம்–1 சொத்துக்கு மேற்கு, ராஜ வீதிக்கு வடக்கு, G.ரங்கநாதனின் வீட்டுக்குத் தெற்கு. இதன் மத்தியில், **அளவுகளாக,** கிழமேல் வடபுறம் – 19 அடி, கிழமேல் தென்புறம் – 19 அடி, தென்வடல் கிழபுறம் – 47 அடி, தென்வடல் மேற்புறம் – 47 அடி, ஆகச் சேர்ந்த மொத்தம் 893 சதுரடி நிலம், அதனோடான கட்டிடம் (கதவு எண்.1/183, சொத்து வரி விதிப்பு எண். 203, மின் நுகர்வு சர்வீஸ் S.C எண்.04–436–002–24), அங்குள்ள ரோடுகளில் வழித்தட மற்றும் வண்டித் தட உரிமைகளுடன் மற்றும் அனைத்துப் பாத்தியதைகள், வசதிகளில் உரிமைகளுடன். தானத் தீர்வுப் பத்திர தேதி : 15.11.2019 (ஆவண எண்.3676/2019) ல் மற்றும் அதன் மூலப் பத்திரங்களில் குறிப்பிட்டுள்ளபடி. இவ்விரு இனங்களின் சேர்ந்த மொத்தம் 2021 சதுரடி (1128 + 893) நிலம். தற்போது உட்பிரிவு மறு சர்வேயின்படி மேற்படி சர்வே எண்.272/23 உட்பிரிவான (i) சர்வே எண்.272/23B ல் 0.0105.0 சதுர மீட்டர் மற்றும் (ii) சர்வே எண்.272/23A2 ல் 0.0083.0 சதுர மீட்டர், இச்சொத்து அயோத்தியாபட்டினம் பஞ்சாயத்து யூனியனில், மேட்டுப்பட்டி கிராமப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டு அமைந்துள்ளது. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.667049 N, 78.311474 E**	அ) 24.11.2023 **ஆ) 31.12.2024 தேதி அன்று ரூ.66,64,166.98 (ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து அறுபத்து நான்காயிரத்து நூற்று அறுபத்து ஆறு மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)** மற்றும் **01.01.2025** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். (கணக்கு எண். 0416008700011598) இ) 05.02.2024 ஈ) அடையாளம்	**1) ரூ.64,60,000/–** (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) **2) ரூ.6,46,000/–** (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) **3) ரூ.50,000/–** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 26.02.2025 (புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **26.02.2025 (புதன்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.

https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 29.01.2025
இடம் : கோயமுத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 8(6)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

**இண்டிய